

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஏப்ரல் - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## ஏப்ரல் - 01.04.2020

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்






## தமிழக நிகழ்வுகள்

- **சுகாதாரத் துறையில் செவ்வாய்க்கிழமையுடன் (31.3.2020) ஓய்வு பெற்ற மருத்துவர்கள் உள்ளிட்ட பணியாளர்களுக்கு 2 மாதங்கள் பணி நீட்டிப்பு வழங்கப்படுவதாக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்துள்ளார்.**
    - வயது மூப்பு காரணமாக மார்ச் 31-ஆம் தேதியுடன் மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவ தொழில்நுட்பப் பணியாளர்கள் ஓய்வு பெறக் கூடியவர்கள் இருக்கின்றனர்.
    - **செய்தி துளிகள்:**
        - கரோனா நோய்த்தொற்று தடுப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள காரணத்தால் அவர்கள் அனைவருக்கும் ஓய்வுக்குப் பிறகு, ஒப்பந்த முறையில் மேலும் 2 மாதங்கள் பணி தொடர தற்காலிக பணி நியமன உத்தரவு அளிக்கப்படும்.

## இந்திய நிகழ்வுகள்

- கரோனா தொற்று பரவல் காரணமாக நெட் உள்ளிட்ட அனைத்து என்.டி.ஏ. (தேசிய தேர்வுகள் முகமை) தேர்வுகளுக்கும் விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.
    - **'நெட்' தேர்வுக்கு கல்லூரி உதவிப் பேராசிரியர் பணிக்கு தகுதி பெறுவதற்கும், மத்திய அரசின் இளநிலை ஆராய்ச்சி உதவித் தொகை பெறுவதற்குமான 'நெட்' நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க மே 16 வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.**
    - **செய்தி துளிகள்:**
        - அடிப்படை அறிவியல் துறை சார்ந்த படிப்புகளுக்கு நடத்தப்படும் சி.எஸ்.ஐ.ஆர். - நெட் தேர்வுக்கு விண்ணப்பிக்க மே 15 வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

- கரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்படும் நோயாளிகளை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கும் வகையில் மாற்றியமைக்கப்படவிருக்கும் **20,000 ரயில் பெட்டிகள் 3.2 லட்சம் படுக்கை வசதி கொண்டவையாக இருக்கும் என்று இந்திய ரயில்வே தெரிவித்துள்ளது.**
    - மாற்றியமைக்கப்படவுள்ள ரயில் பெட்டிகளை இந்திய ரயில்வேயின் 16 மண்டலங்களுக்கும் பிரித்தளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
    - **செய்தி துளிகள்:**
        - இதில் தெலங்கானா மாநிலம் செகந்தராபாதில் தலைமையகத்தை கொண்டிருக்கும் தெற்கு மத்திய ரயில்வேக்கு அதிகபட்சமாக 486 பெட்டிகள் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன.
        - மும்பையை தலைமையிடமாக கொண்டு செயல்படும் மத்திய ரயில்வேக்கு 482 பெட்டிகள் வழங்கப்படவுள்ளன.

## சர்வதேச நிகழ்வுகள்

- கரோனா வைரஸ் தொற்றுநோயின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக கிழக்கு ஆசியாவில் மேலும் **1.10 கோடி(11 மில்லியன்) மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்று உலக வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது.**
    - **செய்தி துளிகள்:**
        - சீனாவின் வூஹான் நகரில் தொடங்கிய வைரஸ் இன்று உலகம் முழுவதும் 200க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ளது.
        - இதனால் அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் பொருளாதாரம் ஸ்தம்பித்துள்ளது.
        - இந்நிலையில் கரோனாவால் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியினால் கிழக்கு ஆசியாவில் மேலும் 1.10

We Shine Academy

கோடி(11 மில்லியன்) மக்கள் வறுமையில் தள்ளப்படுவார்கள் என்று உலக வங்கி எச்சரித்துள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் **2021ஆம் ஆண்டில் இருந்து 2022ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்படுவதாக உலக தடகள கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**
    - **செய்தி துளிகள்:**
        - உலக தடகளப் போட்டிகள் 2021 ஆகஸ்ட் 6 முதல் 15 வரை ஒரேகானில் நடைபெறுவதாக இருந்தது.
        - ஆனால் ஒலிம்பிக் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டதால், தடகளப் போட்டிகள் நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டது.

## திருக்குறள்

**குறள் எண்** : 155

**குறள் பால்** : அறத்துப்பால்

**குறள் இயல்** : இல்லறவியல்

**குறள் அதிகாரம்** : பொறையுடைமை

**குறள் :**

**ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்**

**பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து**

**விளக்கம் :**

பிறர் தீமை செய்த போது அதைப் பொறுத்துக் கொள்ளமால் அவரைத் தண்டித்தவரை அறிவுடையோர் மதியார், அதனைப் பொறுத்துக் கொண்டவரைப் பொன் போன்று உயர்வாக மதிப்பார்.